# ஐக்கிய சோசலிசக் கட்சியின் யாப்பு (தமிழ் மொழிபெயர்ப்பு)

***1. நாமம் (பெயர்)***

*கட்சியின் பெயர் ஐக்கிய சோசலிசக் கட்சி ஆகும்.*

---

***2. நோக்கங்கள்***

*A. இலங்கை மக்களின் நலனை மேம்படுத்துதல்.*

*B. இலங்கையின் பொருளாதார, அரசியல் ,சமூக உறவுகளில் முற்போக்கான நடவடிக்கைகளுக்காகப் போராடுதல் மற்றும் இலங்கையில் சோசலிச சமூகம் ஒன்றை நிறுவுதல்.*

*C. இலங்கையின் தேசிய சுதந்திரம், இறையாண்மை மற்றும் பிரதேச ஒருமைப்பாடு ஆகியவற்றைப் பாதுகாத்தல்.*

*D. மனித உரிமைகள், ஜனநாயக உரிமைகள் போன்ற செயல்முறைகளைப் பாதுகாத்து மேம்படுத்துதல்.*

*E. இலங்கையில் வாழும் அனைத்து மக்களுக்கும் தாம் விரும்பிய மதத்தைப் பின்பற்றுவதற்கும் மத அனுஷ்டானங்களில் ஈடுபடுவதற்கும் உள்ள சுதந்திரத்தை சமமாக உறுதிப்படுத்துதல். மற்றும் மதத்தைப் பின்பற்றாமல் இருப்பதற்கான உரிமையைப் பாதுகாத்தல். (பின்னர் திருத்தப்பட்ட பகுதி)*

*F. ஐக்கிய இலங்கைக்குள் இனங்களின் சுயநிர்ணய உரிமைக்கான உரிமையை உறுதிப்படுத்துதல்.*

*G. அனைத்து இனங்கள் மற்றும் இனக்குழும சமூகங்களிடையே நட்பு, சமத்துவம், ஒத்துழைப்பு ஆகிய இலட்சியங்களை மேம்படுத்துதல். மேற்படி இனங்களும் இனக்குழும சமூகங்களும் தமது அடையாளம் மற்றும் கலாசாரத்தை வளர்ப்பதற்கான உரிமையை உறுதிப்படுத்துதல்.*

*H. அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாசாரத் துறைகளில் எந்த மட்டத்திலும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் உள்ள சம உரிமையை உறுதிப்படுத்துதல் மற்றும் சிறுவர் தலைமுறையைப் பாதுகாக்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளுதல்.*

*I. இளைஞர்களுக்கு இலவசக் கல்வி, வேலைவாய்ப்பு போன்ற அனைத்து சந்தர்ப்பங்களையும் வழங்குதல் மற்றும் அவர்களின் உரிமைகளை உறுதிப்படுத்துதல்.*

*J. ஏகாதிபத்தியம், முதலாளித்துவம், இனவாதம், சர்வாதிகாரம், சாதி அமைப்பு, ஆணாதிக்கம் ஆகியவற்றுக்கு எதிராகப் போராடுதல் மற்றும் இலங்கையில் எந்த வகையான பாரபட்சம் காட்டுவதற்கும் எதிராகப் போராடுதல்.*

*K. கட்சியின் நோக்கங்களை மேலும் விரிவுபடுத்துவதற்காக நடைபெறும் தேர்தல்களில் போட்டியிடுதலும் பங்குபற்றுதலும்.*

*L. சர்வதேச உறவுகளிலும்: ஏகாதிபத்தியம், முதலாளித்துவம், தேசிய விடுதலை, சுயநிர்ணயம் மற்றும் ஜனநாயகத்திற்காகவும் சமூக முன்னேற்றத்திற்காகவும் நடைபெறும் போராட்டங்களுக்கு*

*ஆதரவு வழங்குதல். மூன்றாம் உலக நாடுகளின் ஒத்துழைப்பை வலுப்படுத்த உதவுதல். உலகம் முழுவதும் தற்போது நடைபெறும் சோசலிச செயல்முறைகளுடன் ஒத்துழைப்பைத் தொடர்தல் மற்றும் ஏகாதிபத்திய எதிர்ப்பு முற்போக்கான அரசாங்கங்களுக்கு ஆதரவைத் தெரிவித்தல்.*

*M. அணு ஆயுதங்கள் மற்றும் பேரழிவை ஏற்படுத்தக்கூடிய எந்த வகையான ஆயுதங்களையும் தடைசெய்வதற்காக மேற்கொள்ளப்படும் அனைத்து இயக்கங்கள் மற்றும் போராட்டங்களுக்கும், பொதுவாக நிராயுதபாணியாக்கத்திற்கும் உலக சமாதானத்தை நிறுவுவதற்கும் ஆதரவளித்தல்.*

---

### *3. அங்கத்துவம் (உறுப்பினர்)*

*கட்சி, கட்சி உறுப்பினர்களைக் கொண்டது. மேலே குறிப்பிடப்பட்ட நோக்கங்களை ஏற்றுக்கொண்டு, நிர்ணயிக்கப்பட்ட உறுப்பினர் கட்டணத்தைச் செலுத்த இணங்கும் எவரும் கட்சி அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். பிரதேச ரீதியாக நிறுவப்படும் கிளைகளிலும், மத்திய குழு தீர்மானிக்கும் எந்த வகையிலும் அங்கத்துவம் ஒழுங்கமைக்கப்படும்.*

---

### *4. மகா சம்மேளனம் (பேரவை)*

*a. அனைத்து அங்கத்தவர்களும் கட்சி கிளைகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளும் கலந்துகொள்ளும் கட்சியின் மகா சம்மேளனம் இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும்.*

*b. கட்சியின் ஏதேனும் ஒரு குழுவால் முன்வைக்கப்படும் தீர்மானங்கள் / ஆலோசனைகள் மகா சம்மேளனத்தின் அனுமதிக்கு உட்பட்டவை.*

*c. மகா சம்மேளனத்தின் மூலம் மத்திய குழுவிற்கான உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.*

---

### *5. விசேட மகா சம்மேளனம் (விசேட பேரவை)*

*a. விவாதிப்பதற்காக / கலந்துரையாடுவதற்காக / அனுமதிப்பதற்காக ஏதேனும் விசேட விடயங்கள் மகா சம்மேளனத்தில் உட்படுத்தப்பட வேண்டும் என்று மத்திய குழு தீர்மானிக்கும் போது, மத்திய குழுவினால் விசேட மகா சம்மேளனம் கூட்டப்படும்.*

*b. குறைந்தது மூன்று வாரங்களுக்கு முன்னதாக அத்தகைய அறிவித்தல் செய்யப்பட வேண்டும். சாதாரண பெரும்பான்மை வாக்குகளால் அத்தகைய தீர்மானங்களுக்கு ஒப்புதல் அளிக்க முடியும்.*

---

### *6. மத்திய செயற்குழு*

*a. கட்சியின் ஆட்சி அதிகாரம் மகா சம்மேளனத்தால் தேர்ந்தெடுக்கப்படும் மத்திய குழுவுக்கு உரித்தானது.*

*b. சாதாரண பெரும்பான்மை வாக்குகள் மூலம் மத்திய குழு அனைத்துத் தீர்மானங்களையும் மேற்கொள்ளும்.*

## *7. குழுக்கள்*

*a.* பல்வேறு துறைகளில் கட்சியின் செயற்பாடுகளை முன்னோக்கிக் கொண்டு செல்லவும் அவற்றை ஒருங்கிணைக்கவும் மத்திய குழுவால் காலத்துக்குக் காலம் குழுக்கள் நியமிக்கப்படும்.

*b.* அத்தகைய அனைத்துக் குழுக்களும் மத்திய குழுவின் முழு மேற்பார்வையின் கீழ் செயல்படும்.

---

## *8. உத்தியோகத்தர்கள் குழாம்*

*a.* மத்திய குழுவினால் கட்சிக்காக தலைவர் ஒருவர் நியமிக்கப்படுவார். கட்சியின் அனைத்துக் கூட்டங்களுக்கும் அத்தலைவர் தலைமை வகிப்பார்.

*b.* மத்திய குழுவினால் கட்சிக்காக செயலாளர் ஒருவர் நியமிக்கப்படுவார். கட்சியின் அனைத்துக் கூட்டங்களும் செயலாளரால் கூட்டப்படும். கட்சியின் அனைத்து அறிக்கைகளையும் செயலாளரே வைத்திருப்பார்.

*c.* மத்திய குழுவினால் கட்சியின் நடவடிக்கைகளுக்காக பொருளாளர் ஒருவர் நியமிக்கப்படுவார். அனைத்து நிதிகளுக்கும் அவரே பொறுப்பும் பாதுகாவலரும் ஆவார். கட்சியின் எந்தவொரு நிதிக்காகவும் பணத்தை திரட்டுவதற்கும் அந்தப் பணத்தைச் செலவு செய்வதற்கும் அவரே பொறுப்பு வகிப்பார். பொருளாளராக அவருக்கு ஒப்படைக்கப்படும் கடமைகள் மற்றும் பொறுப்புகளுக்காக அவர் மத்திய குழுவுக்குப் பொறுப்புக் கூற வேண்டும்.

---

## *9. நிதியம்*

*a.* கட்சிக்காக நிதியம் ஒன்று உள்ளது. மத்திய குழு தீர்மானிக்கும் முறை மற்றும் அளவுக்கு ஏற்ப ஒவ்வொரு உறுப்பினரும் அந்த நிதிக்கு பங்களிக்க வேண்டும். வேறு ஏதேனும் மூலங்களிலிருந்து கட்சிக்குக் கிடைக்கும் ஏனைய அனைத்துப் பணமும் இந்த நிதியில் வைப்பிலிடப்பட வேண்டும்.

*b.* விசேட தேவைகளுக்காக மத்திய குழுவினால் ஒரு நிதியம் அல்லது நிதியங்கள் நிறுவப்படும்.

---

## *10. மக்கள் தொடர்புகள்*

*a.* மத்திய குழுவினால் காலத்துக்குக் காலம் கட்சியின் கொள்கைகள் மற்றும் தத்துவ தரிசனம் வரைவிலக்கணம் செய்யப்படும். அத்துடன், காலத்துக்குக் காலம் தேவைக்கேற்ப சில வேலைத்திட்ட வரைவுகள் அல்லது கொள்கை அறிக்கைகளைத் திட்டமிட்டு கட்சி சார்பாக பொது அறிக்கைகளை வெளியிடும்.

*b.* தனது தனிப்பட்ட மட்டத்திலோ அல்லது அதன் செயலாளர் மூலமாகவோ எந்தவொரு நபர், அமைப்பு அல்லது இலங்கை அரசாங்கத்துடனும் பேச்சுவார்த்தை நடத்த மத்திய குழுவுக்கு அதிகாரம் உண்டு.

## *11.* செயற்பாடுகள்

ஏதேனும் ஒரு தேர்தலில் தம் கட்சியின் வேட்பாளரை / வேட்பாளர்களை நிறுத்துவதற்கோ அல்லது வேறு ஒரு அமைப்பு மூலம் பெயரிடப்பட்ட வேட்பாளருக்கு / வேட்பாளர்களுக்கு ஆதரவு தெரிவிக்கவோ கட்சி திட்டமிட்டால்:

*a.* அந்தத் தேர்தலில் தனது வேட்பாளர் அல்லது வேட்பாளர்களைப் பெயரிடுவதன் மூலமோ அல்லது வேறு வகையில் பெயரிடப்பட்ட வேட்பாளருக்கு / வேட்பாளர்களுக்கு ஆதரவு தெரிவிப்பதன் மூலமோ அந்தத் தேர்தலில் கலந்துகொள்ள வேண்டும் அல்லது,

*b.* சம்பந்தப்பட்ட தேர்தல் / தேர்தல்களில் கட்சி எடுத்த முடிவுக்கு எதிராகப் பொது அறிக்கை அல்லது தமது நிலைப்பாடு பற்றிய அறிக்கையை வெளியிடலாம்.

---

## *12.* நீக்கம் (இராஜினாமா, வாபஸ்பெறல்), வெளியேற்றுதல் மற்றும் கலைத்தல்

*a.* யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை மீறிய போதோ அல்லது கட்சியின் தீர்மானத்திற்கு முரணாகச் செயற்பட்ட போதோ அந்த உறுப்பினர் மத்திய குழுவின் பெரும்பான்மை வாக்குகளால் எடுக்கப்படும் ஒரு தீர்மானத்தின் மூலம் கட்சியிலிருந்து வெளியேற்றப்படலாம். இந்த சந்தர்ப்பத்தில் மத்திய குழு உறுப்பினர் ஒருவருக்கு ஒரு வாக்கு மட்டுமே உரித்தாகும்.

*b.* மகா சம்மேளனத்தில் பொது உறுப்பினர்கள் குழுவினால் கட்சி கலைக்கப்பட வேண்டும் என்று ஒரு பிரேரணை முன்வைக்கப்பட்டு அது பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டால், கட்சி கலைக்கப்பட்டதாகக் கருதப்படும். இச் சந்தர்ப்பத்திலும் ஒரு உறுப்பினருக்கு ஒரு வாக்கு மட்டுமே பயன்படுத்த முடியும்.

---

## *13.* திருத்தங்கள்

மத்திய குழுவின் தீர்மானத்திற்கிணங்க கூட்டப்படும் விசேட சம்மேளனத்தில் கட்சி யாப்பில் திருத்தம் செய்யப்பட வேண்டும் என்று ஒரு பிரேரணை முன்வைக்கப்பட்டு, அது மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டால் அவ்வாறு திருத்தம் செய்யப்பட வேண்டும்.

---

## *14.* பிரதான அலுவலகம்

கட்சியின் பிரதான அலுவலகம்: இல. 53/6, ஈ. டீ. தபாரே மாவத்தை, நாராஹேன்பிட்டி, கொழும்பு 5 ஆகும்.

2009 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 31 மற்றும் நவம்பர் மாதம் 01 ஆகிய திகதிகளில் நடைபெற்ற தேசிய சம்மேளனத்தில் கட்சி யாப்பின் 2 ஆம் பகுதியின் E உப பிரிவின் முடிவில் "மதத்தைப் பின்பற்றாமல் இருப்பதற்கான உரிமையைப் பாதுகாத்தல்" என்ற திருத்தம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

சிறிதுங்க ஜயசூரிய
பொதுச் செயலாளர்
ஐக்கிய சோசலிச கட்சி